கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 89/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயமணி | வயது | 27 |
| தந்தை பெயர் | ஜெயபால் | ஜாதி | |
| தொழில் | பெட்ரோல் பங்க் கேசியர் | மதம் | |
| ஊர் | கீராங்குடி | தாலுக்கா | |

( 1,3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 2 வது எதிரி சார்பில் குவிமுச 317 ன் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது கீராங்குடியில் வசித்து பெட்ரோல் பங்கில் கேசியராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அசா.1 மற்றும் அசா.2 ஐ தெரியாது. வழக்கு விபரம் குறித்து எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 13.07.2019 ம் தேதி நான் காணூர் பெட்ரோல் பங்க் அருகே வேலை பார்த்து கொண்டிருந்தபோது காவல் ஆய்வாளர் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் இரண்டு காவலர்கள் பணியில் இருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த இருச்சக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் குடிபோதையில் போலீசாரை தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி வண்டியில் வைத்திருந்த பீர்பாட்டிலை உடைத்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அதனை நான் நேரிட்டு பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 89/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அஜய் குமார் | வயது | 29 |
| தந்தை பெயர் | ஆசை தம்பி | ஜாதி | |
| தொழில் | லோடு மேன் | மதம் | |
| ஊர் | என்மேநிலம் | தாலுக்கா | |

( 1,3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 2 வது எதிரி சார்பில் குவிமுச 317 ன் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது என்மேநிலத்தில் வசித்து லோடு மேன் வேலை பார்த்து வருகிறேன். நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 13.07.2019 ம் தேதி இரவு 20.00 மணிக்கு நானும் நடராஜன் என்பவரும் பெட்ரோல் பங்கில் இருந்தபோது அன்றைய தினம் மாலை 07.00 மணியளவில் நடந்த தகராறு தொடர்பாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.